★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/89 8/78

மலர்: 21 வைகாசி: 15 றஜப்: 2 இதழ்: 109

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 29-5-79

அரிய சந்தர்ப்பம்
மலிவு விலையில்
TATUNG—12'' டெலிவிஷன் செற் BOOSTER இல்லாமல் இயங்கக் கூடியது ARIEL குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும்.
குறிப்பு: டெலிவிஷன் காட்சி தினசரி 6-30க்கு மேல் காண்பிக்கப்படும்.
விநியோகஸ்தர்கள்:
லேடன் ரேடர்ஸ்:
சேகரம் கட்டிடம்
188/3 (74) ஆஸ்பத்திரிவீதி.
யாழ்ப்பாணம். போன்: 693

SRI LANKA ... RECEIVED 1979-5-29 PERIODICALS DIVISION

## புதியமேயர் பதவியேற்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகராட்சி மன்றத்தின் புதியமேயர் திரு இராசா விசுவநாதன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நண்பகல் 12-52க்கு வரும் சுபநேரத்தில் சத்தியப்பிரமாணம் செய்து தமது கடமையைப் பொறுப்பேற்பார்.

அன்று மாலை 3-00க்கு வண்ணார்பண்ணை சாந்தையர் மடம் விநாயகர் ஆலயத்திலிருந்து அன்னாரின் வீடுவரை வண்ணார்பண்ணை தமிழர் விடுதலை கூட்டணிக் கிளையினராலும், பொதுமக்கள் வர்த்தகராலும் மகத்தான வரவேற்பளிக்க ஏற்பாடாகியுள்ளது.

# கம்பளை முன்னாள் எம்.பி. மற்றும் மூவர் மீது கொலைக் குற்றச்சாட்டு

## கண்டி மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கலானது

(கண்டி)

**கம்பளைத் தொகுதியின் முன்னாள் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. டி. எம் ஜெயரத்தினு மீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டு, கண்டி மேல்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

கடந்த பொதுத் தேர்தலைத் தொடர்ந்து நடைபெற்ற சில வன்செயல்களைத் தொடர்ந்து கம்பளை முன்னாள் எம். பி திரு டி எம் ஜெயரத்தினு மீதும் மற்றும் மூவர் மீதும், கொலை, கொலை முயற்சி, சட்டவிரோதமாகக்கூடி குழப்பம் விளைவித்தது தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நேற்று இவ்வழக்கு கண்டி மேல்நீதிமன்றத்தில விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரிகள் இரண்டாயிரம் ரூபாபிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுவழக்குவிசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

## யாழ்ப்பாணத்தில் நாளை சேக்கிழார் விழா

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் சேக்கிழார் விழா நாளை புதன்கிழமை காலை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

விழாவின் சிறப்புவிருந்தினராகச் செஞ்சொற்கொண்டல், திருமுறைச்செம்மல் பேராசிரியர் சோ சிங்காரவேலனார் கலந்துகொள்ளவிருக்கிறார்.

நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு;

30-5-79 காலை 9-15 9-30 பூசையும் ஆராதனையும், 9-30 10-00 திருமுறை ஓதுதல்; யாழ் இந்துக்கல்லூரி மாணவர், 10-00 11-00 புராண படனம், காரைக்கால் அம்மையார் புராணம் பண்டிதர் இ. நமசிவாயம், கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை, 11-00 11-30 சொற்பொழிவு வித்துவான் மூ. சபாரத்தினம்

(6-ம் பக்கம் பார்க்க)

## 500 பணியாளர் அடையாள வேலைநிறுத்தம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 500க்கு அதிகமான பணியாளர்கள் நேற்று முழுநாளும் அடையாள வேலை நிறுத்தமொன்றை மேற்கொண்டனர்.

சங்கத்தின் இயக்குனர் சபை பணியாளர் பிரதிநிதிக்கு எதிராக, பொதுமுகாமையாளர் சங்கானைப் பொலிசில் செய்துகொண்ட முறைப்பாட்டை வாபஸ் பெறுமாறு கோரி இந்த அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர்.

கோரிக்கைக்கு இணக்கம் தெரிவிக்கும் வரை வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோம் என்று தொழிற்சங்கப் பிரதிநிதிகள் எமது நிருபரிடம் நேற்று தெரிவித்தனர்.

வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து சங்க அலுவல்கள் பெருமளவு பாதிப்புற்றன

## இயற்கையின் எழிலில் இப்படி ஒரு சோதனை:

## 'கறுப்பி' என்றார் தம்பி; உயிரை மாய்த்தாள் அக்கா!

[யாழ்ப்பாணம்]

இறைவன் அருளிய இயற்கை அழகை, ஏளனம்செய்த தம்பியின் கடுஞ்சொல் தாங்காத சகோதரி கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்!

இப்பரிதாப சம்பவம், யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் நேற்று நிகழ்ந்தது.

நாச்சிமார் கோவிலடி தலையாளி ஒழுங்கையைச் சேர்ந்த 22 வயதுள்ள சரவணமுத்து இந்திராணியின் மரணம் தொடர்பாக நடைபெற்ற மரணவிசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

மரணவிசாரணையை பதில் நீதிவானும் திடீர் மரணவிசாரணை அதிகாரியுமான திரு. எஸ். பிரான்சிஸ் நடத்தினார்.

சம்பவ தினமன்று இரவு வழக்கம்போல தம்பிக்கும் அக்காவுக்குமிடையே சண்டை நடந்ததென்றும், அக்கா

[6-ம் பக்கம் பார்க்க]

## திருநெல்வேலி வங்கிக் கொள்ளை:

## "ஐந்துபேரும் துப்பாக்கி வைத்திருந்தனர்"

### கார்ச்சாரதி சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

கொடிகாமத்தில் ஐந்து இளைஞர்கள் எனது காரை வாடகைக்குப் பிடித்துச் சென்று வேம்பிராய் சுடலையடியில் நிறுத்தினர். ஐந்துபேரும் துப்பாக்கியைக் காட்டி என்னை பின் சீட்டுக்குக்கீழ் கிடத்தினர்கள். எதிரி காரை ஓட்டிச்சென்றார்: எதிரியும் துப்பாக்கி வைத்திருந்தார்

திருநெல்வேலி வங்கிக் கொள்ளை முயற்சி வழக்கில் சாட்சியமளித்த கொடிகாமத்தைச்சேர்ந்த வேலுப்பிள்ளை

[6-ம் பக்கம் பார்க்க]

## ஆன்மீகத் தலைவருக்கு அதிசிறப்பான வரவேற்பு

### யாழ். மக்களுக்கு ஆசி வழங்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொண்டு நேற்றுமாலை விசேட ரயில்மூலம் இங்கு வருகை தந்துள்ள தாவூதி போ(ஹ்)ரா சமூகத்தின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய கலாநிதி செய்யிதினு முஹம்மது புர்ஹானுத்தின் சாஹிபும் அவருடன் வருகைதந்த சிஷ்யர்களுக்கும் யாழ் ரயில் நிலையத்தில் உதாகலவரவேற்பளிக்கப்பட்டது

விசேஷ ரயில் நேற்றுப் பிற்பகல் 3-29க்கு யாழ் ரயில்நிலையத்தை வந்தடைந்ததும் போ(ஹ்)ரா சமூகத்தைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் "ஆன்மீகத் தலைவரே வருக வருக" என்று ஞானப்பேரிகை முழக்கினர்

தம்மை வரவேற்கத் திரண்டிருந்த சகலஇன மக்களுக்கும் ரயிலில் இருந்தவாறே கலாநிதி செய்யிதினு முஹம்மது புர்ஹானுத்தின் சாஹிப் ஆசிவழங்கியுமையிரத நிலைய மேடைக்கு இறங்கியதும் அவரை முதலில் யாழ் மாவட்ட அமைச்சரின் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமி கைகூப்பி வணக்கம் தெரிவித்து, கைலாகு கொடுத்து வரவேற்றார், அதற்கு சங்கைக்குரிய கலாநிதி செய்யிதினு முஹம்மது புர்ஹானுத்தின் சாஹிப் நன்றி தெரிவித்து "நான் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளேன். இது எனது இரண்டா

(6-ம் பக்கம் பார்க்க)

★ சாதனையோ சாதனை!

## இப்படியும் ஒரு உலக சாதனை!

லண்டன், மே 28

கொடிய பாம்புகளுடன் கண்ணாடிக் கூடொன்றில் 50 நாட்கள் தொடர்ச்சியாக படுத்திருந்து புதிய உலக சாதனை ஒன்று நிலை நாட்டப்பட்டுள்ளது

தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த 22 வயதான ஜனைப் சுலைமான் என்றவரே இந்தச் சாதனையை ஏற்படுத்தியுள்ளார்

தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த இன்னும் ஒருவரினால் ஏற்படுத்தப்பட்ட சாதனையை ஜனைப் சுலைமான் 14 நாட்களால் முறியடித்தார் (இ)

## வரி விளம்பரம்

### தேவை

B. T. T, E. P. F. எழுதுவதில் அனுபவமுள்ளவரும், ஆங்கில தட்டெழுத்து தெரிந்தவரும், 5 வருடத்துக்கு மேல், அனுபவமுள்ள, தமிழ் கணக்காளர் உடனடியாகத் தேவை, இருபாலாரும் விரும்பத்தக்கது. நேரில் விண்ணப்பிக்கவும். க. நாகமுத்து அன் சன், 48-50, பெரியகடை, யாழ்ப்பாணம். 2583

---

காய்கறி, பழவகைகள், சுருட்டு, வழங்கவிரும்புவோர் பதிவுசெய்க. பதி ஏற்றுமதி வித்பனை கொம்பனி (மாலை தீவுப் பகுதி), 99, Hulftsdorp Street, Colombo-12. 2575

---

### உடுப்பிட்டி பல நோ. கூ. சங்க கிளை நிர்வாகசபைத் தேர்தல்

4-6-79-ல் நியமனப்பத்திரம் தாக்கல் செய்வது.

18-6-79-ல் தேர்தல் நடைபெறும்;

மேலும் விபரம் தேவைப்படின் கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

சி. குழந்தைவேல்,
பொதுமுகாமையாளர்.
25-5-79. 2585

---

### பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம் சாவகச்சேரி

கட்டுவில் தெற்கு சாவகச்சேரி காலஞ்சென்ற இசைவீரசிங்கம் தில்லைநாதன் என்பவரின் மரணசாதனமில்லா சொத்தினதும் பொருட்களினதும் விடயத்தில்

மரணமெய்தியவர்.

இசைவீரசிங்கம் தில்லைநாதன் கைம்பெண் ஞான திரவியம் தில்லைநாதன் நுணுவில் மேற்கு சாவகச்சேரி.

மனுதாரர்.

இல. 190/T

எதிர்

(1) தில்லைநாதன் விஜயேந்திரநாதன் (பராயமடையாதவர் தனது வழக்குப் பாதுகாவலன்)

(2) இசைவீரசிங்கம் ஏகாம்பரநாதன் மூலமாக. இருவரும் நுணுவில் மேற்கு சாவகச்சேரி.

எதிர்மனுதாரர்.

மேற்படி வழக்கு மேற்குறிப்பிட்ட இறந்தவரின் மரணச் சொத்து நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரும் 1979ம் ஆண்டு ஆனி மாதம் 13ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அப் பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுவதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1979ம் ஆண்டு வைகாசி மாதம் 22ம் திகதி

நீதிமன்றக்கட்டளைப்படி.

ஒப்பம்:
வி. சிவசுப்பிரமணியம்
பதிவாளர்.

தயாரித்தவர்
க. கந்தசாமி
மனுதாரின் சட்டத்தரணி
0947

---

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

---

INTENSIVE COURSE IN
**FRENCH**
Starting June 1st
Audio-Visual Method
at the
ALLIANCE FRANCAISE DE JAFFNA
130, 1st Cross St. Jaffna. Tele: 7782
2578

---

### கைதடி கிராமசபை கேள்வி விளம்பரம்

### இரட்டை வீடுகள் அமைத்தல்

கைதடி கிராமசபை விசேஷ ஆணையாளரால் இச்சபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து இரட்டைவீடுகள் கட்டுவதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 13-06-79ம் திகதி காலை 10-00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வித் தொகையைப் பார்த்து கேள்வித் தொகையில் குறிப்பிட்டுள்ள தொகைப்படி மேலும் இரட்டை வீடுகள் கட்டுவதற்கு கேள்விக்காரரிடம் கோரப்படும்.

மேலதிகமான விபரங்களை கைதடி கிராமசபை அலுவலகத்திலும், யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 12-06-79ம் திகதி மாலை 2-00 மணிவரையும் கைதடி கிராமசபை அலுவலகத்தில் வழங்கப்படும்.

கேள்விப்பத்திர பிணைப் பணம்-ரூ 250/-

கேள்விப்பத்திரப்பணம்-ரூ. 100/-

ஏ.ஜெ. செந்தில்நாதன்,
விசேஷ ஆணையாளர்,
கிராமாட்சிமன்றம்,
கைதடி.

கிராமாட்சிமன்றப் பணிமனை,
கைதடி.
25-05-79. 2564


---

### ஆண்டு விழா

(சங்கானை)

வட்டுக்கோட்டை தொகுதி இளைஞர் விவசாயக் கழகங்களின் ஆண்டுவிழா ஜூன் மாதம் 2ம் திகதி வட்டு. இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அராலி இளைஞர் விவசாய கழகத் தலைவர் திரு சி சிங்கராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக எதிர்க்கட்சி முதல்வர் திரு அ அமிர்தலிங்கம், வட்டுக்கோட்டைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு ஆகியோர் கலந்துகொள்வர்.

யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு சிவமுத்துலிங்கம் விழாவை ஆரம்பித்துவைப்பார். யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜெகநாதன் தேசியக்கொடி ஏற்றிவைப்பார்.

கலைநிகழ்ச்சிகள் நாடகங்கள் இடம்பெறும்.

---

அமிர் விஜயத்தின் பின்னர் இலங்கைத் தமிழர்பற்றி

# தமிழ்நாட்டு மக்கள்சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள்

## தமிழ்நாட்டு எழுத்தாளர் தகவல்

"ஈழத்து இலக்கியங்கள் பற்றி தமிழ் நாட்டில் இருக்கும் நிலைமையை மாற்றி ஈழத்துப் படைப்புக்கள் இந்தியாவில் கிடைப்பதற்கு என்னால் ஆனதைச் செய்வேன்" என்று இந்திய இளம் எழுத்தாளர் கோரி கூறுகிறார்.

இளைஞரான ஓ. ஏ. எச். கே. கோரி பார்ப்பதற்கு அழகாகவும், பழகுவதற்கு இனியவராகவும் காணப்படுகிறார். பார்ப்பதற்கு ஒரு கவர்ச்சி நடிகர்போல் காணப்படும் இவரது தாய்மொழி உருது ஆனால் தமிழ் நாட்டில் இருப்பதால் தமிழைக் கற்று தமிழ் மொழி ஆர்வ மேலீட்டால் பல தமிழ் சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

உருதுமொழி பேசுவேன் ஆனால் அதில் பாண்டித்தியம் இல்லை இனித்தான் உருது இலக்கியங்கள் படிக்கப்போகிறேன் என்றார். சிலதினங்களுக்குமுன் 'ஈழநாடு' காரியாலயத்துக்கு திரு. கோரி வந்திருந்தார்.

இந்த எழுத்துத்துறையில் எப்போதிருந்து ஈடுபாடு ஏற்பட்டது, சிறுகதைகளை மட்டும் தான் எழுதுவீர்களா? அல்லது கவிதை நாடகம் இப்படி எல்லாம் எழுதுவீர்களா?" எனக் கேட்டபோது 75-ம் ஆண்டிற்குப் பின்னர் தான் இந்த எழுத்துத்துறையில் எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. நான் தமிழ் சிறுகதைகளை மட்டும் தான் எழுதுவேன் இதுவரை சுமார் 35 சிறுகதைகள் எழுதியிருக்கின்றேன். சென்ற மாதம் 'தடுமாற்றங்கள் பதினஞ்சு' என்ற சிறுகதைத் தொகுதி ஒன்றை வெளியிட்டுள்ளேன்" எனக்கூறி அந்தச் சிறுகதைத் தொகுப்பொன்றை கையில் தருகிறார். 'இந்தத் தொகுதியிலே ஆயிரம் பிரதிகள் அச்சடிச்சோம் அச்சகச் செலவெல்லாம் அங்கே அவ்வளவு மலிவு என்று சொல்லமுடியாது' என்றவரிடம் "ஆயிரம்பிரதிகளும் விற்கப்பட்டிருக்குமே?" என்று கேட்டபோது சற்று லேசாகச் சிரித்தபடி "இல்லைங்க நாம ஆயிரம் காப்பி அடிச்சாலும் நமக்கு 'ஃபிறந்' ஒடர்கிடைச்சாத்தான் புத்தகங்கள் விலைப் போகும் என்கிறார்.

அங்கே நிறையப் புத்தகங்கள் அச்சாகி உடனேயே விற்பனையாகி விடுவதாகக் கூறுகிறார்களே என ஆச்சரியத்துடன் கேட்டபோது "ஆமா ஜெயகாந்தன் மாதம் ஒரு புத்தகம் போடுவார், வித்துப் போகும், கண்ணதாஸன் மாதத்திற்கு இரண்டு அல்லது மூணு புத்தகம் போடுவார், வித்துப்போகும் அவர்களுக்கென்றே ஒரு இமேஜ் இருக்கிறதால அப்படி விலைபடுகிறது" என்று சொல்லிச் சிரிக்கிறார். கண்ணதாஸனுடைய தான் எனது முதல் சிறுகதை வெளியாகியது. பின்னர் இதயம் பேசுகின்றது, ஆனந்தவிகடன் போன்ற புத்தகங்களிலும் எழுதியிருக்கின்றேன்.

ஈழத்து எழுத்தாளர் பற்றி என்ன நினைக்கிறீர்கள் எனது கேட்டபோது "ஈழத்து இலக்கியப் படைப்புக்களை நிறைய பார்க்கின்ற வாய்ப்பு எனக்கு இன்னமும் ஏற்படவில்லை மேமன்கவி, சாந்தன் போன்ற எழுத்தாளர்களைச் சந்தித்திருக்கிறேன். இந்த நிலை எனக்கு மட்டுமில்லை, பொதுவாக இந்தியாவிலேயே இந்த நிலை தான், இந்தியாவிலே மட்டுமில்லே இலங்கையில் கூட இந்தநிலை இருக்கிறது உதாரணமாக இலங்கையில் இருந்து ஒரு ரசிகை எனக்குக் கடிதம் போடுவார் அவரிடம் நான் ஈழத்து மல்லிகை பற்றி எழுதியபோது, இதயம் பேசுகின்றது, விகடன் இவை தவிர வேறுபுத்தகங்கள் பார்ப்பதே இல்லை என எழுதியிருந்தார் என்றார்.

ஈழத்திலே 'சிரித்திரன்' என்ற முழு நகைச்சுவைப் பத்திரிகை வெளிவருகின்றது. நல்ல தரமான பத்திரிகை. அப்படி அனேக புத்தகங்கள் வெளிவருகின்றன. இவற்றை எல்லாம் நீங்கள் படித்து ஈழத்துப் படைப்புக்களை கௌரவிக்க வேண்டும். இந்தியாவிலிருந்து இங்கு வருகின்றவர்களுக்கு நாம் தகுந்த கௌரவம் கொடுக்கின்றோம். ஆனால் இங்கிருந்து இந்தியா செல்பவர்களுக்கு என்று கேட்க. உடனிருந்த மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா இடைமறித்து சிறுகதை எழுத்தாளரான 'நீங்கள் எங்கள் இலக்கிய ஆக்கங்களை எங்களுக்காகப் படிக்கவேண்டாம். உங்கள் எதிர்கால நன்மைக்காகவாவது படியுங்கள் ஈழத்து எழுத்தாளர்களாகிய எங்களை அறியாமல் எங்கள் இலக்கிய தரத்தை உணராமல் ஒரு காத்திரமான இலக்கியநிலையை நீங்கள் உருவாக்க மாட்டீர்கள் அண்டை நாடான எமது இலக்கியத் தரத்தை உங்கள் நாட்டில் எடுத்துச் சொல்லுங்கள் உங்களை எங்கள் எதிர்கால இளம் சந்ததி எழுத்தாளர்களின் பிரதிநிதியாகக்கருதியே இன்று உங்களை வரவேற்கிறோம் என்றார்.

திரு கோரி, நான் இங்குள்ள நிலையை நமது நாட்டில் விளக்கி இலக்கிய இணைப்பு ஏற்பட வழிவகுப்பேன் என்றார்.

உங்கள் நாட்டில் இலங்கை தமிழர் நிலைபற்றி என்னபேசப்படுகிறது எனக்கேட்டபோது "திரு அமிர்தலிங்கம் வருவதற்கு முன்பிருந்த நிலைக்கும் தற்போதைய நிலைக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு இன்று இந்திய மக்கள் ஈழம்வாழ் தமிழ் மக்கள் பற்றி சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள் இதற்கு திரு அமிரின் இந்திய விஜயம் பெரிதும் உதவியிருக்கிறது என்றார்.

மணியனின் இலங்கை விஜயம் பற்றிய கட்டுரை குறித்துப் பேசுகத் திரும்பிய தும் பலதவறான தகவல்களையும் இடப்பெயர்களையும் தமது இலங்கைப் பயணக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் என்றார்

"அவரது இலங்கை விஜயம் என்ற பத்திரிகைகளில்தான் விட்ட தவறுகளைத் திருத்தி நூல் வெளியிட்டு இருக்கிறார் அதற்கு எதிர்க்கட்சித் தலை

[6ம் பக்கம் பார்க்க]

---

### கேரளம் செல்கிறார்

(நீர்வேலி)

வலி-கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. ச. பொதுமுகாமையாளர் திரு. த குமரேசபசுபதி கேரளத்தில் நடைபெறும் கூட்டுறவாளர் கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொள்வதற்காகக் கேரளம் செல்கிறார். அங்கு இவர் இரண்டுவாரங்கள் தங்குவார். (அ)

---

### உரும்பராயில் பீடி தொழிற்சாலை

(நீர்வேலி)

உரும்பராய் புனித மிக்கேல் கிராம அபிவிருத்திச் சங்க ஆதரவில் கடந்த வாரம் பீடித் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சமூகப் போஷகர் வண. பிதா. ஏ. பிலிப் அடிகளார் தலைமையில் நடைபெற்ற தொழிற்சாலைத் திறப்பு விழாவில் கோப்பாய்த் தொகுதி உ. வி. கூ. அமைப்பாளர் திரு ஆ வேலுப்பிள்ளை சம்பிரதாய முறைப்படி மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. பி. என். செல்வரத்தினம், கிராமசேவையாளர் திரு கமலநாதன் உட்படப் பலர் பேசினர். 30 பெண்கள் இத்தொழிற்சாலையில் பணியாற்றுகின்றனர். (அ)

---

### கிளைக்குழுத் தேர்தல்

(நீர்வேலி)

வலிகிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுத் தேர்தல் அடுத்தமாத முற்பகுதியில் நடைபெறவுள்ளது இதற்கான நியமனப் பத்திரங்கள் இன்று தாக்கல் செய்யப்படவுள்ளன. தேர்தல் சம்பந்தமான கருத்தரங்குகள் அந்தந்த பகுதிகளில் கூட்டுறவு இலாகா உத்தியோகஸ்தர்களாலும், கூட்டுறவு பிரசாரகர்த்தாக்களாலும் நடாத்தப்பெற்றன. இதற்கான ஒழுங்குகளை மேற்படி சங்கப் பிரசார உத்தியோகஸ்தர் திரு. ச செல்வரத்தினம் செய்துள்ளார். (க)

---

# "சைவவாழ்வு அன்புவாழ்வு; அன்பின்அடிப்படைசைவம்"

(யாழ்ப்பாணம்)

"சைவமும் தமிழும் பிரிக்க முடியாதவை, சைவ வாழ்வு புனித வாழ்வு; அன்பு வாழ்வு, அன்பை அடிப்படையாகக்கொண்டதே சைவம்"

இவ்வாறு இந்தியாவிலிருந்து இங்கு சுற்றுலா வந்த பேராசிரியர்களில் ஒருவரான சென்னைக் கிறிஸ்தவக்கல்லூரித் தமிழ்த்துறை தலைவர் திரு. க. வடிவேலாயுதம் நாவலர் ஆச்சிரமமண்டபத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்தியாவிலிருந்து ஈழத்திற்குச் சுற்றுலாவந்திருந்த இருபத்தாறு பேராசிரியர்களுக்கும் யாழ் சைவ பரிபாலனசபையினர் வரவேற்புபசாரம் அளித்தனர், அதை அடுத்து பேராசிரியர்கள் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சமய விரிவுரைகள் நிகழ்த்தினார்கள்,

சென்னை எதிராஜ் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த திருமதி வசந்தா இராமச்சந்திரன் 'காரைக்காலம்மையார்' என்ற பொருள் பற்றிப் பேசும்போது "இறைவனால் அம்மையே" என்று அழைக்கும் பெரும்பேறு பெற்றவர் காரைக்காலம்மையார். அவரின் வாழ்வு புனிதமான வாழ்வு. இன்றைய மகளிர் அவர் வாழ்வு நன்கு உணர்ந்து அறியவேண்டியது" என்றார்.

சென்னை ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் திருமதி சந்திர பார்த்தசாரதி 'சேக்கிழார் கண்ட மகளிர்' என்னும் பொருள்பற்றியும் சென்னை கிறிஸ்தவ கல்லூரியைச் சேர்ந்த துணைப்பேராசிரியர் கலைமணி வே. கிருஷ்ணசாமி 'தமிழர் பண்பாடு' என்னும் பொருள்பற்றியும் விரிவுரையாற்றினார்கள்.

சைவபரிபாலன சபைச்செயலாளர் திரு. சி. சண்முகலிங்கம் நன்றிதெரிவித்துப் பேசினார். (கா-சி)

பாராளுமன்றத்தில் ............... கடந்த வாரம்

# 'ஈழவிடுதலைப் புலிகள்' சட்ட விவாதத்தில் 'அமிர்' - 'தேவா' என்றுமில்லாத சொற்போர்!

ஈழ விடுதலைப் புலிகள் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதம் நடைபெறவிருந்த தால் மாத்திரமல்ல, நாட்டில் நடைபெற்ற குட்டிப் பொதுத்தேர்தலின் பின்னர் ஆச் சூடு ஆறுமுன்னரேயே கூடவிருந்தாலும் பாராளுமன்றத்தின் கடந்தவாரம் 21-ம் திகதி அமர்வு வெகு ஆரவாரமாகவும் காரசாரமாக வும் இருக்குமென்பது எதிர்பார்த்ததேதான்.

அந்த எதிர்பார்ப்பு எந்த விதத்திலும் குறைவுபடவில்லை. "சர்க்கரைப்பந்தலில் தேன் மாரி" பெய்ததுபோல அரசாங்க உறுப்பினர்களுக்கு அன்று 'புலி'களுடன் தேர்தலும் வந்துசேர்ந்தது. எதிர்க்கட்சிகளின் இரண்டையுமே வெல்லுதற்கு அவலிகிடைத்தது அவர்களுக்கு!

பலமான பேச்சுக்கு அநேகருக்கு சந்தர்ப்பமில்லாது போய்விட்டாலும் பலமான கூச்சல்களுக்கும் குறுக்கீடுகளுக்கும் குறைவிருக்கவில்லை. சூடான வாக்குவாதங்களும் நிகழ்ந்தன!

முன்னெரெப்போதுமே இல்லாதவிதத்தில் நீதியமைச்சருக்கும் எதிர்க்கட்சித்தலைவருக்குமிடையே மிகப்பலமான சொற்போர் மூண்டது இதில் தமிழர்விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் அனைவருமே பங்குகொண்டார்கள்.

தமிழ்ஈழ விடுதலைப்புலிகளுக்கும் இதையொத்த வேறு அமைப்புகளுக்கும் தடைவிதிக்கும் சட்டத்தை மேலும் ஓராண்டுக்கு நீடிப்பது தொடர்பான திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுதற்காகவே சபை அன்றைய தினம் விசேடமாகக் கூடிய போது சொத்துக்களைப் பறிமுதல்செய்வது தொடர்பான அச் சட்டத்தின் 7வது பிரிவு அரசியலமைப்புடன் முரண்படுவதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதாக சபாநாயகர் ஜனாப் பாக்கீர் மார்காா் சபைக்கு அறிவித்தார் அதனால் மூன்றில் - இரண்டு பெரும்பான்மையுடன் அச் சட்டமூலத்தை நிறைவேற்ற நேரிந்தது.

சபை ஆரம்பித்து வாய்மூல வினாக்களுக்கு விடையளிக்கப்பட்டுக்கொண்டிருந்த சமயம், சு. க. வைச் சேர்ந்த கொத்மலை உறுப்பினர் திரு ஆனந்ததஸநாயக்க சபையில் பிரவேசிக்கவுமே சபையில் கூச்சலும் ஆரம்பமானது.

## மக்கள் நிராகரித்தபின் ஏன் வருகிறீர்கள்?

"மக்கள் நிராகரித்தபின் ஏன் இங்கு வருகிறீர்கள்?" என குரல்கள் ஒலித்தன.

## அரச எம். பிக்கள் கரகோஷம்

சபை பி. ப. 3 மணிக்கு ஆரம்பித்தபின், 3-10க்கு பிரதமர் அரசாங்க தரப்பு 'லொபி' வாயிலாக சபையுள் பிரவேசிக்கவும் அரசாங்க உறுப்பினர் அனைவரும் உள்ளூராட்சி தேர்தல் வெற்றிக் களிப்பினை வெளிப்படுத்தும் விதத்தில் எழுந்துநின்று கரகோஷமிட்டு பிரதமரை வரவேற்றார்கள்.

## சிறிமா வந்ததும் கூச்சல்

சில நிமிடங்களுக்கு நீடித்த இக் கரகோஷம் நிசப்தமான அடுத்தவிநாடியே எதிர்க் கட்சி 'லொபி' வாயிலின் வழியாக சு. க. தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சிரித்தபடியே சபைக்குள் பிரவேசிக்கவும் மறுகணம் பலத்த கூச்சல் அங்கு எழுந்தது.

அந்தக் கூச்சல் அடங்கிய சில நிமிடங்களில் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு சிறில் மத்தியூ. அவரின் இடதுகை 'பிளாஸ்ரர்' செய்யப்பட்டு மடித்து கழுத்தில் தொங்கவிடப்பட்ட நிலையில் சபையில் பிரவேசித்தார். நீளக்கைச்சட்டையுடனேயே வழக்கமாக சபைக்குவரும் அவர் அன்று சாரமும் அணிந்திருந்தார்.

என்ன காரணத்தினாலோ அவரின் கையில் 'பிளாஸ்ரர்' செய்யப்பட்டிருந்தது.

முன்னாள் செனட்சபைத் தலைவர் திரு. தோமஸ் அமரசூரியாவின் மறைவுகுறித்த அனுதாபத்தீர்மானம் சபையில் நிறைவேறியதும் நீதியமைச்சர் திரு. கே. டபிள்யு தேவநாயகம் பிரஸ்தாப புலித்தடைச்சட்ட திருத்தத்தை சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

சட்டப் புத்தகத்தில் நிரந்தரமாகவே இச் சட்டத்தை வைத்திருக்கும் நோக்கம் அரசுக்கு கிடையாதென்றும் ஆனால் கடந்த ஓராண்டினுள் குறித்த இவ்வியக்கத்தின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாது போனதனாலேயே மேலும் ஓராண்டுக்கு இச் சட்டத்தை நீடிப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

அமைச்சரைத் தொடர்ந்து, கோப்பாய் உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை சட்டமூலம் மீது பேசினார்.

"தமிழ்ஈழப் பிரதேசத்தில் சட்டவிரோத ஆட்சியொன்றை ஏற்படுத்தும் நடவடிக்கையே இது" என்றார் அவர்.

## 'புலி' லேபல் ஒட்டுவதால் பிரச்னை தீராது

"சிலரைப் பிடித்து, 'புலி' என்று 'லேபல்' ஒட்டி கூண்டில் அடைத்து விடுவதால் பிரச்னை தீர்ந்துவிடாது, காலங்கடத்தாது பிரச்னையைத் தீர்ப்பதற்கான வழிபற்றிச் சிந்தியுங்கள். இத்தகைய சட்டங்களால் 'புலி'களைத்தானும் அடக்கிவிட முடியாது

கடந்த ஓராண்டு காலத்தினுள் அடக்கிவிடமுடியவில்லை என அமைச்சரே கூறினார். இது போன்ற சட்டங்கள் அவற்றை இன்னும் அதிகரிக்கச் செய்யவே உதவும். உள்ளூராட்சித்தேர்தல் மூலம் அரசின் மீது மக்கள் தமது நம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள், எனவே, மக்களின் நம்பிக்கையைப்பெற்ற இவ் அரசு தமிழர்களின் அடிப்படைப்பிரச்னையைத் தீர்ப்ப

[5ம் பக்கம் பார்க்க]

## -- மாலி --

### மக்கள் கருத்து

## தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க ஊழியர் தேர்தல்

கடந்த 4-5-79 வெள்ளிக்கிழமை "ஈழநாடு" நாளிதழில் மக்கள் கருத்துப் பகுதியில் வெளியாகிய "அதிகாரிகள் கவனிப்பார்களா" எனும் தலைப்பில் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர் பிரதிநிதி தேர்தல்பற்றிய திரு மா. ஜெகநாதன் என்பவரின் கடிதம் படித்தேன். தேர்தல் நடத்தியவர்கள் என்ற முறையில் இதுபற்றிய விளக்கத்தை அளிப்பது எனது கடனாகும்

திரு மா. ஜெகநாதனின் தேர்தல்பற்றிய கருத்துக்களை நோக்குமிடத்து அவர் யானை பார்த்த குருடர்களின் நிலையிலேயே இருப்பதை உணர முடிகின்றது. ஊழியர்களுக்குத் தேர்தல் அறிவுறுத்தல்கள் தெரிவிக்கப்பட்டபோது குறித்த ஜெகநாதன் என்பவர் அங்கிருந்திருந்தால் உண்மை அவருக்குப் புரிந்திருக்கும். "கேள்விச் செவியனூர் ஊரைக் கெடுத்த" கதையாகக் கதையளந்திருப்பது அனுதாபத்திற்குரியது

தேர்தலின்போது நடைபெற்றது இதுதான்:- தேர்தலுக்காகச் சகல ஊழியர்களும் கூடியிருந்தபோது சங்கத் தலைவராகிய நானும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு கா. குமாரசாமியும் தேர்தலில் வாக்களிக்கும் முறை, வாக்குச்சீட்டு ஆகியவைபற்றி விளக்கமளித்தோம். திரு. ஜெகநாதன் குறிப்பிடும் 36 சின்னங்கள் கொண்ட கூட்டுறவுத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டைக் காட்டி; முதல் இரண்டு சின்னங்களையும் (பஸ், காவுகாரன்) வேட்பாளருக்கு ஒதுக்கி அச்சின்னங்களுக்கு அவ்வாக்குச் சீட்டு மூலம் வாக்களிக்க விரும்புகிறீர்களா? அல்லது சங்கத்தால் உறுதி செய்யப்பட்ட ஒரு வெற்று வாக்குச் சீட்டில் அவர்கள் விரும்புகிற வேட்பாளரின் பெயரை எழுதுவதன்மூலம் வாக்களிக்க விரும்புகிறீர்களா? அல்லது வேறு ஏதும் முறைகளை விரும்புகிறீர்களா? எனக் கேட்டபோது திரு ஜெகநாதனும் காட்டிக் கப்படும் 36 சின்னங்கள் அடங்கிய வாக்குச்சீட்டில் வாக்களிக்க விரும்புவதாகவே ஊழியர்கள் தெரிவித்தனர் எனவே வாக்குச்சீட்டுத் தேர்வு தொழிலாளரின் விருப்புக்கமையவே நடைபெற்றது. சின்னங்களில்லை, உருவமைப்பு ஒற்றுமை கொண்டன என்பதும் அவரது பிறிதொரு குற்றச்சாட்டு. நான் தெளிவாக முதல் இரண்டு சின்னங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டதாகத் தெரிவித்த பின்னர் ஊழியர்கள் ஏனைய சின்னத்தைத் தேடிப் பார்த்து தமது வாக்கை அளிக்கவேண்டிய அவசியம் ஏற்படாது என்பதை திரு. ஜெகநாதன் அறியவேண்டும்.

வாக்குச்சீட்டுக்கள் கூட தொடர் இலக்க முறையில் வைக்கப்படாது யாவும் கலக்கப்பட்டு வாக்குச்சீட்டை விநியோகிப்பவர் சீட்டு இலக்கத்தைக் காண முடியாதவாறு எந்த இலக்கச் சீட்டு எந்த ஊழியருக்கு வழங்கப்பட்டது என்பதைக் கண்டுபிடிக்கமுடியாதவாறுமே விநியோகிக்கப்பட்டன இவை யாவும் ஊழியர் முன்னிலையில் அவர்களின் முழுமையான ஒப்புதலுடனேயே நடைபெற்றன.

பொதுமுகாமையாளர் யாருக்கு வாக்களிப்பார் என்பதைப் பார்த்து ஊழியர்கள் வாக்களிப்பர் என்ற கூற்று இன்றைய ஜனநாயக யுகத்தில் கேள்விக்குரியதாகும். சிந்தனைத் தெளிவுகொண்ட ஒவ்வொரு வாக்காளனும் தமது எண்ணத்துக்கமையவே வாக்களிப்பார்.

சுருக்கச் சொன்னால், ஜனநாயக நெறிகளுக்கமைய ஊழியர்களின் ஒப்புதலோடு தேர்தல் எவ்வித இடையூறுகளுக்குமிடமின்றி நடத்தப்பட்டது என்பதை மீண்டும் உறுதி செய்கின்றேன்.

சி. சிவமகராசா
தலைவர்,
தெல்லிப்பழை,
ப. நோ. கூ. சங்கம்.
தெல்லிப்பழை.





மிளகாய்
இலைச் சுருளை தடுக்கிறது
விளைச்சலை அதிகரிக்கிறது
'அக்டெலிக் 50'

பாவிக்கும் முறை
4-6 கலன் நீரில் 1 திரவ அவு. 'அக்டெலிக் 50' கலந்து 10 நாட்களுக்கு ஒருமுறை தெளிக்கவும்.

மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்க,
CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்,
4-ம் மாடி, ஹேமாஸ் கட்டடம் கொழும்பு 1.

பாலஸ்தீன மக்களுக்கு

# சுதந்திர தனிநாடு மிக அவசியம்

## வாஜ்பாய் வலியுறுத்து

பக்தாத், மே. 28

பாலஸ்தீனியர்களுக்கு சுதந்திரமான 'தனி நாடு' ஒன்று அவசியம்.

இவ்வாறு இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. வாஜ்பாய் பாக்தாத்தில் தெரிவித்தார்.

பாலஸ்தீன மக்களுக்கு ஒரு தனி நாடு அவசியம் என்ற இந்தியாவின் கருத்தை மீண்டும் பாக்தாத்தின் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் வலியுறுத்திய திரு. வாஜ்பாய், பாலஸ்தீன மக்களுக்கு அவர்களது எதிர்காலத்தை நிர்ணயிக்கும் உரிமை பூர்த்திசெய்யப்பட வேண்டும் என்றும் இதற்கு தனிநாடுதான் ஒரேவழி என்றும் கூறினார். (இ)

## மொரிட்டானியா பிரதமர் விமான விபத்தில் பலி!

டாக்கா, மே 29

மொரிட்டானிய பிரதமர் கேர்ணல் அகமட் பௌஸி விமானவிபத்தில் பலியானார்.

செனகலின் தலைநகரான டாக்காருக்கு அருகே பிரதமர் சென்றுகொண்டிருந்த விமானம் கடலில் விழுந்து நொருங்கியதை அடுத்து, விமானத்தில்பயணம்செய்த எவருமே உயிர்தப்பவில்லையாம்.

பிரதமர் சென்ற விமானம் புழுதிப் புயலில் அகப்பட்டு விமானநிலையத்துடனான தொடர்புகள் திடீரென துண்டிக்கப்பட்டதை அடுத்து விமானம் கடலில் விழுந்ததாம். (இ)

ப. நோ. கூ. ச.

## போட்டியின்றி தெரிவு

(சுன்னாகம்)

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஏழாலை வடக்கு கிளை (இல 21) குழுவுக்கு பின்வருவோர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர்கள் இ. அருணகிரிநாதன், வீ. கோபாலசுந்தரம், நா. செல்வராசா, க. புவனசுந்தரம், செ. மகாதேவன், அ. அருட்பிரகாசம், வே. நாகரத்தினம், நா. கந்தசாமி, சி. சண்முகானந்தன்.

## நாகையில் கம்யூனிஸ்டுக்கு ஜனதா ஆதரவு

சென்னை, மே. 28

நாகபட்டினம் லோகசபைத் தேர்தலில் போட்டியிடும் இந்திய கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினர் திரு. கே. முருகையனுக்கு ஜனதா கட்சி ஆதரவளிக்கும் இத்தகவலை மத்திய எரிபொருள் அமைச்சர் திரு. பா. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனும் நாகபட்டினத்தில் அ. இ. அ. தி. மு. கவுக்கு ஜனதா கட்சியின் ஆதரவைக் கோரியிருந்தார். (இ)

## இன்றைய பலன்

வைகாசிமாதம் 15-ம் திகதி

செவ்வாய்க்கிழமை

(29-5-1979)

மேடம்: இன்று அதிக ஆதாயம் கிடைக்கும். புதுத் தொழில்துறைகளை மனம் நாடும். தூரதேசப் பிரயாணத்திற்கும் இடமேற்படலாம்.

இடபம்: துன்பத்தின் சாயல் மனதிலே படியும். பிறர் புண்படுத்துவதனால் மனது புண்படும். சிலர் உதவிசெய்யப்போய் உபத்திரவத்தில் மாட்டிக்கொள்வார்கள்.

மிதுனம்: சிறிய விபத்திற்குக்கூட அதிக ஆத்திரம் தோன்றும். மற்றவர்கள் குறுக்குவழித் தலையிடும் இடம் பெறும். பொறுமை நன்று.

கடகம்: திடீர் திருப்பம் வாழ்க்கையை வளம்படுத்தும். சிலர் வாழ்க்கை அதிர்ஷ்டகரமானதாக அமையும்.

சிங்கம்: ஆசை அலைகளினால் அவப்பெயருக்கு இடமுண்டு. குறுக்கு வழிகளில் இறங்க வேண்டும். சிறிய விடயத்திற்குக்கூட பெரிய கோடம் தோன்றக்கூடும்.

கன்னி: மாலுவழிப் பெருமைக்கும் இடமுண்டு. மனம் போல் யாவும் கிடைக்கும். இன்று மாணவர்களாயின் கல்வியில் சிறப்பும் குடும்பத்தில் உறவினர் கொண்டாட்டமும் கிடைக்கும்.

துலாம்: கற்றதால் பயன் கைமேல் கிடைக்கும். கலைஞர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். தொழில் புரியும் இடத்தில் செல்வாக்குப் பெருகும்.

விருச்சிகம்: ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டும். எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும். வேண்டாத நடவடிக்கையின் மூலம் நண்பர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடும்.

தனுசு: உள்ளத்தில் அமைதி குன்றும். இல்லத்தில் பூசல்கள் தோன்றி மறையும். உணவு விடயத்தில் கவனஞ் செலுத்தவும்.

மகரம்: ஆரம்ப சூரத்தனம் ஆபத்தில் முடியலாம். பூமிப் பிணக்கால் நஷ்டத்திற்கு இடமுண்டு. சிலர் உடல்நலன் பாதிக்கப்படலாம்.

கும்பம்: பெரியோரைப் பேணுவதன்மூலம் பெரிய காரியங்களைச் சாதிப்பீர்கள். பொதுத் துறையில் அதிக புகழ் கிடைக்கும். இன்று மகிழ்ச்சிகரமான தினமாகும்.

மீனம்: அன்புக் கரங்கள் அணைக்கும். அதிர்ஷ்ட தேவதையின் பார்வையும் பதியலாம். குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும்.

சோதிடக்கலாநிதி

இணுவில் க. வேலுப்பிள்ளை

## இளைஞர் சேவைமன்றம் நடத்தும் கலை இலக்கியப் போட்டி

(உடுப்பிட்டி)

தேசிய இளைஞர் சேவை மன்றம் நடாத்தும் கலை இலக்கியப் போட்டிகளுக்கான தெரிவு ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்தும் நடாத்தப்பட்டு வருகின்றது.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நாடகம், ஓரங்க நாடகம், நாட்டியம், நாட்டுப் பாடல், புதுக் கவிதை, நாவல், சிறுகவிதை, கவிதை, கட்டுரை, கவரொட்டி எழுதுதல் ஆகியவற்றிலான போட்டிகளை நடாத்துவதற்கான ஒழுங்குகளை உதவி அரசாங்க அதிபர் திரு ஏ. குணநாயகம் மேற்கொண்டுவருகின்றார்.

எதிர்வரும் 31ம் திகதிக்கு முன்னர் இதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நடக்கும் நாடகப்போட்டி

(உடுப்பிட்டி)

பருத்தித்துறை கல்வி வட்டாரப்பாடசாலைகளுக்கிடையிலான சங்கீத, நடன, நாடகப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ். துரைச்சாமி அறிவித்துள்ளார். (அ)

## கிளைக்குழுத் தேர்தல் 11ம் திகதி

(உடுப்பிட்டி)

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 22 கிளைகளுக்கான கிளைக் குழுத்தேர்தல் அடுத்த மாதம் 11ம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 28ம் திகதி ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## "கூட்டுத்தாபனம் தயாரிக்கும் அப்பியாசக் கொப்பிகள் கள்ளச்சந்தைக்கே போகின்றன"

(யாழ்ப்பாணம்)

"பாடசாலை மாணவர்களுக்கென வாழைச்சேனைக் கடதாசிக் கூட்டுத்தாபனம் பெருந்தொகையான அப்பியாசக் கொப்பிகளை உற்பத்திசெய்து வழங்கினாலும் அவை அனைத்தும் மாணவர்களைச் சென்றடையவில்லை. அவை கறுப்புச்சந்தையையே சென்றடைகின்றன. இதனால் மாணவர்கள் அதிக விலை கொடுத்தே வாங்கும் நிலை இன்றுள்ளது".

இவ்வாறு வடபிராந்திய போக்குவரத்துச்சபை இயக்குநர் சபைத் தலைவரும், யாழ் ப. நோ. கூ. சங்கத் தலைவருமான சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம் யாழ் ப நோ கூ சங்கத்தின் அப்பியாசக் கொப்பிகள் தயாரிக்கும் புதிய கைத்தொழிற்சாலையை யாழ்ப்பாணம் பிரதானவீதியில் திறந்து வைத்து உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "இன்று ஆரம்பித்து வைக்கும் புதிய கைத்தொழிற்சாலை விரைவில் வடபகுதி மாணவர்களுக்குக் கட்டுப்பாட்டு விலையில் அப்பியாசக் கொப்பிகளை வழங்கும். இத்தொழிற்சாலையில், சிறிய தொகையினர் வேலைக்கமர்த்தப்பட்டாலும், விரைவில்பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்".

விழாவில் யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் திரு என்ரி செல்வத்துரை, திரு. தம்பு கந்தையா உட்படப்பலர் பேசினர். (செ-க)

கட்டுவனில்

## சிறுவர் நூலக திறப்பு விழா

(தெல்லிப்பழை)


தெல்லிப்பழை கட்டுவன் புலம் வித்தியாலய சிறுவர் நூலக திறப்பு விழா நாளை புதன்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது.

இவ்வித்துவை சிறுவர் வாரத்தையொட்டி இந்நூலகம் திறந்துவைக்கப்படவிருக்கிறது.

வித்தியாலய அதிபர் திரு. சி. சிவநாதபிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நூலகத்திறப்பு விழாவை காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு பொ சிவஞானசுந்தரம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார்.

மின்சாரசபைத் தொழிலதிபர் கெ. தர்மவள்ளல் திரு. கனகராஜா நூலகத்தை திறந்து வைப்பார்.

Jem
ஜெம்



10,000 க்கு மேற்பட்ட "ஜெம்" மின்சார மோட்டர்கள் தற்பொழுது இலங்கையில் பாவிக்கப்படுகின்றன.

10,000க்கு மேற்பட்ட "ஜெம்" மின்சார மோட்டர்கள் உற்பத்தி செய்து விற்பனையாகி யுள்ளன. இதன் சிறப்புக்கு வேறென்ன அத்தாட்சி வேண்டும்?

முற்றிலும் மூடப்பட்டதும் விசிறியால் குளிரடைவதுமான இந்த மோட்டர், மேற்கு ஜேர்மன், E. BLUM KG தாபனத்தின் தொழில் நுட்பக் கட்டிணைப்புடன் தரமான உறுப்புக்களைக் கொண்டு, அரசாங்கத்தின் அங்கீகாரம் கொண்ட ஜினசேன இலெக்ட்ரிக் மோட்டர்ஸ் லிமிட்டெட்டால் உற்பத்தி செய்யப்பட்டவை.

"ஜெம்" மின்சார மோட்டர்கள் 1/4 எச். பி. முதல் 15 எச் பி வரையிலும், 950 ஆர். பி. எம். முதல்3000ஆர். பி. எம். வரையிலான வேகத்திலும் பல்வேறு ரகங்களில் உண்டு.

யாழ்ப்பாண மாவட்டம் முழுவதிலும், பின்வரும் எமது பிரதான விநியோகத்தர்களிடமும் கிடைக்கும்:

நியூடோன் இலெக்ட்ரிக்கல்ஸ்,
141, 143, ஸ்டேன்லி ரோட்
யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 7016.

ஜினசேன லிமிட்டெட்
இல. 4, ஹுணுப்பிட்டி ரோட்,
கொழும்பு 2. தொலைபேசி: 26558 - 9.

MelADS

(3-ம் பக்கத் தொடர்ச்சி)
தற்கு வழிகாணவேண்டுமென் றும் திரு கதிரவேற்பிள்ளை குறிப்பிட்டார்.

## புலிகள் யார் என்பதை கண்ணாடிமுன் நின்று பார்த்தால் தெரியும்

'புலிகள்' என்று நீங்கள் கூறு கிறீர்களே தவிர, நான் அவர் றைக் காணவில்லை என்றும் திரு கதிரவேற்பிள்ளை கூறிய போது "புலிகள் யார் என்ப தைக்கண்ணாடிக்குமுன்சென்று பார்த்தால் புரியும்" என்றார். அமைச்சர் மத்தியூ.

# ஈழவிடுதலைப் புலிகள்...

திரு கதிரவேற்பிள்ளையைத் தொடர்ந்து நீதியமைச்சர் விவாதத்தை முடித்து பதிலு ரைக்கு எழுந்த வேளையிலேயே அமைச்சர் மத்தியூ அவரை இடைமறித்து விவாதத்தில் கலந்துகொண்டார். அதனால் சுமார் 3 மணிநேரம் விவாதம் மேலும் நீடித்தது.

### கூட்டணியின் அங்கமே 'புலி'

கூட்டணியின் ஓர் அங்கமே 'புலிகள்' என்றும், கடந்த உள் ளூராட்சித் தேர்தலின்மூலம் இது மேலும் உறுதிப்படுத்தப் படுவதாகவும், இவர்களின் வன்முறை நடவடிக்கைகளைப் பாவித்தே தேர்தலில் கூட்டணி யினர் வாக்குத்தேடினரென் றும் குறிப்பிட்ட அமைச்சர், உள்ளூராட்சித் தேர்தல்கள் குறித்து கூட்டணிக்கெதிராக பல குற்றச்சாட்டுக்களைச்சுமத் தினார். இவை அனைத்துக்குமே இவரைத் தொடர்ந்து பேசிய எதிர்க்கட்சித்தலைவர் திரு அ அமிர்தலிங்கம் பதிலளித்தார்.

### அமிரின் வவனியா தேர்தல் பிரசாரம்

வவனியாவில் உள்ளூராட் சித்தேர்தல் பிரசாரத்தின் போது திரு, திருமதி அமிர்த லிங்கம் பேசியதாககுறிப்பிடப் பட்ட பொலிஸ் அறிக்கைகளை யும் அமைச்சர் திரு மத்தியூ சபையில் வாசித்தார்.

### அமிர் ஒப்புக்கொண்டார்

அமைச்சர் வாசித்த அறிக் கைகளின் சாரப்பட நாம் பேசியது உண்மையே என்றும் அதனை நாம் பேசினோம்; இனியும் பேசுவோம் எமது துன்பம் இருக்கும்வரை- அவை நீக்கப்படும்வரை-எமது உரிமை கள் மறுக்கப்படும்வரை எமக்கு அவற்றைக்கூற உரிமையுண்டு; நாம் பேசியவற்றில் ஒன்றுகூட உண்மைக்கு மாறானதல்லஎன் பதை இச்சபையில் என்னால் நிரூபிக்கமுடியும் என்றும் திரு அமிர்தலிங்கம் கூறினார்.

திருமதி அமிர்தலிங்கம், பண்டாரிகுளம் கூட்டத்தில் கற்பழிப்பு பற்றி பேசியதாக வும், அவருக்கு கற்பழிப்புதான் எங்குமே ஞாபகம் வருவதாக வும் இந்தியாவிலும் அதையே தான் பேசினாரென்றும் குறிப் பிட்டார் அமைச்சர், மத்தியூ.

அவர் பேசிக்கொண்டிருந்த ஒரு கட்டத்தில் திரு அமிர்த லிங்கமும அவரது சகாக்களும் அமைச்சரின் பேச்சைக்கேட்டு சிரிக்கவும்-

"இங்கே நீங்கள் சிரிக்கிறீர் கள்; அங்கேசென்றதும்கொலை களில் ஈடுபடுகிறீர்கள். அரசின் பாதுகாப்புடன் நீங்கள் வாக னத்தில் எங்கும் செல்லமுடி யும்; அதைத்தெரிந்துகொண்டு இங்கு சிரிக்கிறீர்கள்"-என்றார் அமைச்சர்.

ஒருகட்டத்தில் அமைச்சரின் பேச்சுக்கு திரு அமிர்தலிங்கம் குறுக்கிட்டு ஆட்சேபனை தெரி விக்கவும், எவருக்கும் தமது கருத்தை வெளியிட உரிமை இருப்பதாக சபாநாயகர் தெரி வித்தார்.

### கொஞ்சம் பேசாம இருங்க ஐயா

கூட்டணியினர் குறுக்கிட்ட வேளைகளில், 'சொஞ்சம் பேசாம இருங்க ஐயா' என்று அரசாங்க பின்வரிசைகளிலி ருந்து தமிழில் குரல்கள் பல தடவைகளில் ஒலித்தன.

திரு மத்தியூவைத் தொடர்ந்து திரு அமிர்தலிங்கம் தமது பேச்சை ஆரம்பிக்கும்போது—

"நொந்த நிலையில் இன்று வந்த அமைச்சர் விரைவில் நலமடையவேண்டுமென ஆண்டவனை வேண்டுகிறேன். அவர் துயரப் பட்டு இந்நேரத்தில் வந்தது எனக்கு கவலையளிக்கிறது. விரைவில் அவர் சுகமடைந்து இன்னும் வேகமாக எம்மைத் தாக்கும் விதத்தில் அவர் வரு வார் என நான் எதிர்பார்க்கி றேன்" என்றார்.

### வெட்கம்...வெட்கம்...

அமைச்சர் மத்தியூவின் குற் றச்சாட்டுக்கள் ஒவ்வொன்றுக் கும் திரு அமிர்தலிங்கம் பதில ளித்த சமயங்களில் கூட்டணி உறுப்பினர்கள் "வெட்கம், வெட்கம்!"- என்று கூறிக் கொண்டிருந்தனர்.

ஐ தே க அபேட்சகர்கள் தமது கார்களில் கட்சிக்கொடி யுடன் செல்வதற்கு வடபகுதி யில் எவ்வித தடையும் இருக்க வில்லை என்பதை, தமக்கு அருகேயிருக்கும்போக்குவரத்து அமைச்சரைக் கேட்டாலே கைத்தொழில் விஞ்ஞான அமைச்சருக்கு விளங்குமென்று திரு அமிர்தலிங்கம் கூறவும், தடை எதுவும் இருக்கவில்லை என்ற தோரணையில்அமைச்சர் முகம்மது தலையை அசைத் தார்.

"பக்கத்திலுள்ள அமைச்ச ரிடம் கேட்டாவது உண்மை யைத் தெரிந்துகொண்டு, இனி மேலும்இப்படிக்கைத்தொழில் அமைச்சர் பேசாதிருப்பார் என எண்ணுகிறேன்" என்றார் அமிர்.

பின்வரிசை உறுப்பினர் களின் கூச்சலிடையே, வெகு ஆக்ரோஷமாகவே பேசிக் கொண்டிருந்த திரு அமிர்த லிங்கம், "நாம் தாக்கப்படும் நிலை ஏற்பட்டாலும் கூட அவலை யில்லை" என்றவர்-

"சில தினங்களுக்கு முன்னர் இச்சபையிலேயே நான் அமைச்சர் மத்தியூவுக்குப் பதி லளித்துக்கொண்டிருந்தபோது எனக்குப் பின்னாலிருந்த அர சாங்கப் பின்வரிசை உறுப் பினர் ஒருவர் என்னைத் தாக் குவதற்காகத் தனது செருப் பைக் கழற்றிக் கையில் வைத் திருந்தார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்" என்றார்.

### எழுந்து நின்று கூச்சல்

உடனேயே எதிர்க்கட்சிப் பக்கமிருந்த அரசாங்கப் பின் வரிசை உறுப்பினர்கள் எழுந்து நின்று கூச்சலிட ஆரம்பித்த னர். ஆட்சேபனை கிளப்பிய அவர்கள், கையில் செருப்பு டன் இருந்தவர் யாரென்பதை எதிர்க்கட்சித் தலைவர் கூற வேண்டுமென்று கோரினர்.

"எந்த உறுப்பினர் மீதும் நான் குற்றம் சுமத்தவில்லை. அப்படி எவரும் இருக்கவில்லை என்றால் நான் ஏற்றுக்கொள் கிறேன். பொறுப்பு வாய்ந்த அரசாங்க உறுப்பினர் ஒரு வரேதான் எனக்கு இதைக் கூறினார்" என்றார் அமிர்த லிங்கம்.

"சொன்னவர் யார்?" என்று மீண்டும் கூச்சல் எழுந் தது.

"அவரைச் சொல்லமாட் டேன்" என்றார் திரு. அமிர்த லிங்கம்.

அப்போது சபைக்குத் தலைமைதாங்கிக்கொண்டிருந்த பிரதிச் சபாநாயகர் திரு நோமன் வைத்தியரத்ன: "நீங்கள் நேரடியாகவே பார்த்தீர்களா?" என்று எதிர்க்கட்சித் தலைவரிடம் கேட்டார்.

### எனக்குப் பின்புறம் கண்கள் இல்லை

"நானே காண்பதற்கு எனக் குப் பின்புறம் கண்களில்லை, சொல்லவே கேட்டேன்" என் றார் அமிர்.

இச்சபையிலே இவ்வளவு ஆக்ரோஷத்துடன் பேசும் நீங் கள் மேடைகளில் எப்படிப் பேசுவீர்கள் என்ற அமைச்சர் திரு காமினி திஸநாயக்கா—

ஜனநாயகத்தை நீங்கள் ஆதரிப்பதானால் பயங்கரவா தத்தை நாட்டில் ஒழிப்ப தற்கு நீங்கள் உதவவேண்டும் என்றார்.

பஞ்சிகாவத்தையில் ஒரு காரின் 'டஸ்ற்காப்' திருட்டுப் போனாலே 5 நிமிடத்தில் பொலிசார் கண்டுபிடித்துவிடு கின்றனர் ஆனால் வடபகுதி யில் அப்படி முடிவதில்லை.

காந்தியக் கொள்கைகளுக்கு அரசு விரோதமானதல்ல. நீங்கள் சத்தியாக்கிரகம் செய் தால் நாம் உங்களுக்கு உண வூட்டத் தயாராக இருக்கின் றோம். உணவு முடியாவிட் டால் பணங்களாவது தரு வோம் என்றும் கூறினார்.

### ஈழக் கோரிக்கைக்கு தமிழக ஆதரவை அனுமதிக்க மாட்டோம்

தமது நாட்டில் இப்படி ஒரு தனிநாட்டுக் கோரிக்கை எழுப்பப்படின் 24 மணி நேரத் தில் அதைத் தாம் தடை செய்வோமென்றும், ஈழக் கோரிக்கைக்குத் தமிழ்நாட்டு ஆதரவை அனுமதிக்கமாட் டோமென்றும் இந்தியப் பிர தமர் திரு. மொரார்ஜி தேசாய் தம்மிடம் தெரிவித்த தாகக் குறிப்பிட்ட அமைச்சர் வெளிநாட்டு உதவிகள் எது வுமே உங்களுக்குக் கிட்டா தென்றும் கூறினார்.

அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா, "உங்கள் பேச்சுக்களை நீங்கள் அடக்கா விட்டால் உங்கள் சகோதரர் களை —அவர்களின் பிள்ளை களை உங்களால் காப்பாற்ற முடியாதுபோகும்" என்ற போது—

"இப்படியான மிரட்டல் களைப் பல தடவைகளில் நாம் கேட்டிருக்கிறோம்" என் றார் திரு. அமிர்தலிங்கம்.

அமைச்சர் காமினி திசநா யக்கா பேசிக்கொண்டிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் குறுக் கிட்ட திரு அமிர்தலிங்கம், மாற்றுத்திட்ட யோசனை பற் றிக் குறிப்பிட்டு, தலைமை நம்பியுள்ள மக்களுக்காகத் தமது உயிரையே கொடுக்கத் தாம் தயாராக இருப்பதாக வும் சூளுரைத்தார்.

### தேவாவின் பேச்சில் பலர் குறுக்கீடு

கடைசியாக நீதி அமைச் சர் தனது பதிலுரையை வழங்கிய சமயம் சபையில் பெரும் அமளியேற்பட்டது; அவரது பேச்சினிடையே திரு. அமிர்தலிங்கம், திரு. தர்ம லிங்கம், திரு.கதிரவேற்பிள்ளை ஆகியோர் ஆக்ரோஷத்துடன் பல தடவைகளில் குறுக்கிட் டனர். அவ்வேளையில் சபை யில் பெரும் கூச்சல் எழுந்து கொண்டிருந்தது. அமைச்சர் பேச்சைத் தொடர்வதே பெரும் சிரமமாக இருந்தது.

### அமிர் தர்மருக்கு அனுமதி மறுப்பு

எதிர்க்கட்சித் தலைவரும், மானிப்பாய் உறுப்பினரும் குறுக்கிட்டுப் பேசமுற்பட்ட வேளைகளில், சபாநாயகர் அவர்களுக்கு அனுமதி மறுத் தார். திரு. அமிர்தலிங்கத் தின் குரல் அன்று 'கட்டிய' நிலையில் இருந்ததில் வழக்கம் போலக் கூச்சல்களின் நடு விலும் அவர் கூறியவற்றை அன்று கேட்கமுடியவில்லை. அமைச்சர் தமது பதிலுரை யில் குற்றச்சாட்டுக்களைச் சுமத்த முயல்வது முறையற்ற தென்றும் திரு. அமிர்தலிங்கம் சபாநாயகரிடம் ஒரு கட்டத் தில் முறையிட்டார்.

நீதியமைச்சர் திரு. தேவ நாயகம்—

வடபகுதியைத் தவிர நாட் டில் வேறெங்கும் வன்செயல் கள் நடைபெறவில்லை என்றார்

1977 பொதுத் தேர்தலில் கூட்டணி போட்டியிட்ட 22 தொகுதிகளிலும் 397, 496 வாக்குகளையே கூட்டணி பெற் றது. கூட்டணிக்கு எதிராக 451, 189 வாக்குகள் அளிக் கப்பட்டன. எனவே கூட்டணி மக்களாணை எதனையும் பெற வில்லையென்றும் கூறினார்.

இ தொ கா, தமிழ்க்காங் கிரஸ், தமிழரசு ஆகிய மூன் றும் இணைந்தே கூட்டணியை உருவாக்கின என்று அமைச்சர் கூறவும் திரு. தர்மலிங்கம்

[6ம் பக்கம் பார்க்க]

வெஸ்லி (சாவகச்சேரி)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி
கப்பலோட்டிய தமிழன்

Rio (Jaffna) Phone: 7607
Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
Jim Brown in
SLAUGHTERS BIG RIP OFF
(Adults only)

நாகம்மா (கன்னாகம்)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - தேவிகா
சாந்தி

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா, சௌகார்ஜானகி நடித்த
ஒளிவிளக்கு
சஸ்மன் கலர் புதிய பிரதி

REGAL (Jaffna) 2nd CROWDED WEEK
Daily 4-30, 7-00 & 9-30 p.m. only
PERCY'S PROGRESS
(Color) (Adults Only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஃ டொன் பொஸ்கோ ஃ காஞ்சனா ஃ செல்வசேகரன் ஃ ஜவாகர்
இன்னும் பலர் திறம்பட நடித்த
எங்களில் ஒருவன்

3-வது வெற்றி வாரம்!
சாந்தி (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
தர்மேந்திர குமார் — ஹேமமாலினி —பானுரேகா
"கோரா அவுர் காலா" ஹிந்தி கலர்
யாழ்நகரில் இப்படம் இதுவே கடைசித்தடவை

வெலிங்டன் (சாவகச்சேரி)
தினசரி 2-30, 6-30 & 9-45
சனி, ஞாயிறு 10-30, 2-30, 6-30 & 9-45
எம். ஜி. ஆர். — சாவித்திரி
வேட்டைக்காரன் (புதிய பிரதி)

லிடோ (யாழ். நகர்)
போன் 7893 தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—சரோஜாதேவி
என் தம்பி

மனோகரா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த் - பிரமிளா லக்ஷ்மி (பசு) நடித்த
கோமாதா என் குலமாதா
(புதிய பிரதி - ஈஸ்மன்கலர்)

கடைசி 3 தினங்கள்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30, 6-15, 9-30.
THE TOWERING INFERNO
த டவரிங் இன்பேர்னோ

22-வது வாரம்
வின்சர் (யாழ்ப்பாணம்)
போன் 488
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்மன் கலர்)

# இடதுசாரி அரசியல் கட்சிகளை நிர்மூலமாக்கும் திட்டமாம்!

## புதிய தேர்தல் முறைபற்றி வயித்திலிங்கம் கருத்து

(யாழ்ப்பாணம்)

தேர்தலில் தாம்பெறும் வாக்குவீதங்களுக்கு ஏற்ப ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் அல்லது குழுவிற்கும் ஆசனங்கள் வழங்கும் முறையே விகிதாசார பிரதிநிதித்துவமாகும். இதற்கு முரணாக இரண்டு ஜனநாயக விரோத விதிகளை அரசாங்கம் சேர்த்துள்ளது?' என்று கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு. அ. வயித்திலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

எந்த ஒரு மன்றத்தின் தேர்தலிலும் கூடுதலான வாக்குகளைப் பெறும் கட்சிக்கு அல்லது குழுவிற்கு இரண்டு மேலதிக ஸ்தானங்கள் வழங்கப்படுகின்றது, ஒன்று முதல்வர் மற்றது உதவி முதல்வர். இதன் பலனாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு 74 ஸ்தானங்களும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 12 ஸ்தானங்களுக்கு மேலதிகமாகக் கிடைத்துள்ளன.

'ஒரு மன்றத் தேர்தலிலும் ஒன்றுக்கு குறைவான வாக்குகளைப் பெற்ற கட்சிகள் புறக்கணிக்கப்படுகின்றன, இக்கட்சிகளுக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் பெறுமதியற்றவை ஆக ஆக்கப்படுகின்றன. இதனால் பெரிய கட்சிகள் கூடுதலான ஆசனங்களைப் பெறுகின்றன. இதன் மூலம் இன்றைய முதலாளித்துவ சமூக அமைப்பை கட்டிக்காக்க வகிக்கும் கட்டும் பெரிய அரசியல் கட்சிகளை மட்டும் வளர்ப்பதுடன் சிறிய இடதுசாரி அரசியல் கட்சிகளை நிர்மூலமாக்குவதே இப்படியான தேர்தல் முறையை உருவாக்கியவர்களின் முக்கிய நோக்கமாகும். இப்படியான நோக்கம் பகற்கனவு என்பதை பொதுமக்கள் உணர வெகுகாலம் செல்லாது. அனுபவரீதியாகத்தான் மக்கள் இதனை உணர்ந்து மாற்றுவதற்கு பாராளுமன்ற ரீதியிலும் வேறு வழிகளிலும் தகுந்த ஸ்தாபன போராட்ட முறைகளை உருவாக்கத் தவறமாட்டார்கள்.

"இன்றைய முதலாளித்துவ சமூக அமைப்பைத் தொடர்ந்தும் பாதுகாக்க திருவாளர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா கையாளும் பகிரதப் பிரயத்தனங்கள் பயனற்றவையாகும்' என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலை அபிவிருத்தியில் புதிய ஏற்பாடு

(சுன்னாகம்)

"முன்னைய ஆட்சியின்போது பெற்றோர் ஆசிரியர் மட்டும் பாடசாலை வளர்ச்சியில் அங்கம் வகிக்கும் வகையில் ஆசிரியர் பெற்றோர் சங்கம் இருந்தது. ஆனால் தற்பொழுது பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அப்பாடசாலை பிரதேசத்தில் வாழும் பாடசாலை நலன்விரும்பிகள், மாணவர் தலைவர்கள் அனைவரும் பாடசாலை அபிவிருத்தியில் பங்கு கொண்டு ஆலோசனை வழங்கவும் இன்றைய அரசு வழிவகுத்துள்ளது. இந்த ஒழுங்கினால் பாடசாலை நல்ல விருத்திபெற நல் வாய்ப்பு ஏற்படுகிறது" என பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அபிவிருத்திச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தலைமைதாங்கி உரையாற்றிய கல்லூரி அதிபர் திரு வே நாகராசா குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் கடந்த காலங்களைவிட அதிகமானோர் இவ் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டமை மகிழ்ச்சிக்குரியது இதேபோல் அபிவிருத்திச்சங்க நல்முயற்சிகளுக்கு இன்று வந்தவர்கள் தாங்களும் கலந்து ஆதரவு தருவதோடு ஏனைய பெற்றோர், பழையமாணவர், நலன்விரும்பிகள்போன்றவர்களையும் பங்கு கொள்ளச் செய்யவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

## கூட்டணியின் அவசரக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர்களுக்கும் வெற்றிபெறாத வேட்பாளர்களுக்குமான அவசரக்கூட்டமொன்று இன்றுமாலை தமிழர் விடுதலைக்கூட்டணிப்பணிமனையில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் சகல கூட்டணி எம் பிக்களும் கலந்துகொள்வார்கள். (கெ)

## மணவாளக் கோல விழா

(நீர்வேலி)

நீர்வேலி காமாட்சியம்பாள் கோவில் மணவாளக்கோல விழாத் திருவிழா இம்மாதம் 30 ம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது. (அ)

## தமிழ்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் திரு அமிர்தலிங்கமே முகவுரையும்எழுதியுள்ளார் என்ற விபரத்தை நண்பர் ஒருவர் தெரிவித்தார்

இவருடன் "எண்ணக்கோலம்" கவிதை நூல் ஆசிரியர் கவிஞர் திரு க கணேசலிங்கமும் வந்திருந்தார் காசி வாசி செந்திநாதய்யரின் ஞாபகார்த்தக்குழு செயலாளராகவும், காசி வாசி செந்திநாதய்யர் பத்திரிகை ஆசிரியராகவும் அவர் இருக்கிறார்

க. தி. ரவிந்திரன்

## யாழ். ஆயுர்வேதக் கல்லூரி பரீட்சைப் பெறுபேறுகள்

(பண்டத்தரிப்பு)

கடந்த 1976ம் ஆண்டு நடைபெற்ற யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியர் கல்லூரி இறுதி ஆண்டுப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த வாரம் ஆயுர்வேதத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளன. 1977 — 1978ம் ஆண்டுகளுக்கான ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகள் எதிர் வரும் ஆகஸ்ட்மாதம் 10ம் திகதி தொடக்கம் 15ம் திகதி வரை ஆயுர்வேதத் திணைக்களப் பரீட்சைப் பகுதியினால் நடாத்தப்படுமென வடஇலங்கை சுதேச வைத்திய சபையின் செயலாளர் டாக்டர் கந்தைய இன்னாசித்தம்பி தெரிவித்தார். இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் விபரம் பின்வருமாறு:

### சித்திபெற்றவர்கள்

கே விக்னேஸ்வரன். ஏ அன்ரோ நீட்டா. பி சிவஞானசுந்தரம், ரி சிங்கஆரியரத்தினம், எம் சத்தியமூர்த்தி, ஐ பாலேந்திரம், வி சுந்தரலிங்கம், எம் கருணானந்தன்

செல்விகள் எஸ் தனபால சரஸ்வதி, எஸ் கமலாதேவி, எஸ் மரியமலர், என் மல்லிகாதேவி, ஏ நகுலேஸ்வரி, எஸ் ராதாமணி, ஜே சரோஜினி, எஸ் நிர்மலாதேவி எஸ் ஞேஸ் மாசில்லா. கே பத்மாவதி, எஸ் டார்வதிப்பிள்ளை.

### நூனசித்தி

எம் கிருஷ்ணராசா, ரி சிவானந்தன். ஏ. கதிரைமலைநாதன். எப் எஸ் ஜெரொல்ட் டோபிள்ளை. வி. வீரசிங்கம், எஸ் பொன்னம்பலம். (அ)

## ஆன்மீகத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வது விஜயம், யாழ்ப்பாண மக்களுக்கு எனது ஆசியும், மகிழ்ச்சியும் உரித்தாகட்டும் என்று கூறினார்,

அவரைத் தொடர்ந்து, யாழ் அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்ணான்டோ, யாழ் மேல்நீதிமன்ற நீதிபதி ஜனாப் எம் ஜமீல், யாழ்பதில் நீதிவான் திரு கே கனகரத்தினம் யாழ் மாநகரசபையின் புதிய மேயராக தெரிவு செய்யப்படவிருக்கும் திரு இ விசுவநாதன், மற்றும் கூட்டணி மாநகரசபை அங்கத்தவர்கள், கோப்பாய்எம்பி திரு எஸ்.கதிரவேலுப்பிள்ளை. யாழ் சுங்கக் கட்டுப்பாட்டதிகாரி திரு சேனரத்தின மற்றும் நூற்றுக்கணக்கான வர்த்தகர்கள் பொதுமக்கள் உட்பட பல்வேறு மத ஸ்தாபனங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் வரவேற்றனர்

இதன் பின்னர் ரயில்நிலைய வெளி மண்டபத்தில் மதத் தலைவர் வரவேற்கப்பட்டார், வரவேற்பு வைபவத்திற்கு, யாழ் வரவேற்புக் குழுத்தலைவர் திரு கே கனகரத்தினம், உரையாற்றுகையில், "ஆன்மீகத் தலைவரது யாழ் விஜயம் எமது மக்களுக்கு பெரும் பாக்கியமாகும். சகல மக்களுக்கும் அவரது அருளாசி கிடைக்க இறைவன் அருள் வழங்கட்டும்" என்று கூறினார்

பின்னர் சங்கைக்குரிய கலாநிதி செய்யிது முகம்மது புர்ஹானுத்தீன், சாஹிப் மோட்டார் கார் பவனியாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியால் அழைத்துச் செல்லப்பட்டார். (ஜெ)

## ஈழவிடுதலை...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

குறுக்கிட்டு "கூடவே நீங்களும்" என்றார்.

### கூட்டணி என்று ஒன்று இப்போது இல்லை

இப்போது இ தொ கா, தமிழ்க் காங்கிரஸ் இரண்டுமே விலகிவிட்டதாகவும், தமிழரசுக்கட்சியேயன்றி கூட்டணி என்று ஒன்று இப்போது இல்லையென்னும் திரு. தேவநாயகம் தெரிவித்தார்.

சகல கட்சிகளும் இச்சபையில் அங்கம் வகிக்காததால் விஞ்ஞாபனத்தில் கூறியபடி சர்வகட்சி மாநாடு சாத்தியமில்லையென்றும் நீதியமைச்சர் கூறினார்.

### சுதந்திரக்கட்சியினர் சபையில் இல்லை

வாக்கெடுப்பின்போது சுதந்திரக்கட்சியினர் எவரும் சபையில் இருக்கவில்லை. விவாதத்திலும் அவர்கள் பங்குபற்றவில்லை

பிரதமர் விவாதத்தை மேலும் நீடிக்க விரும்பாததைத் தொடர்ந்து இரவு 7-30 மணிக்குச் சபையில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

அம்பலாங்கொடை உறுப்பினர் திரு ஊரட்டர் இலங்கோ அன்று காவி உத்தரியம் தரித்தவாறு சபைக்கு வந்திருந்தார்.

கலரிகள் முழு நேரமும் நிரம்பிக் காணப்பட்டன (இ)

## யாழ்ப்பாணத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் விரிவுரையாளர் காரைநகர் இந்துக்கல்லூரி "தொண்டர் சீர் பரவுவார். 11-30 12-15 திருமுறை ஓதுதல் இராமநாதன் கல்லூரி மாணவிகள், சுன்னாகம், 12-15 12-30 ஆராதனை, மாகேசுவர பூசை

மாலை நிகழ்ச்சிகளுக்கு திரு அ சோமசுந்தரம் தலைமை தாங்குவார் 5-00-6-00 வரை சேக்கிழார் சுவாமிகள் திருவுருவப்படம் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவிலிலிருந்து யாழ் இந்துக் கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்துக்கு எழுந்தருளச் செய்தல் 6-00-6-30 வரை திருமுறை ஓதுதல் யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள், 6-30-645 வரை வரவேற்புரை வித்துவான் க சி நடராசன், 6-45-7-00 வரை தலைமையுரை, 7-00-8-30 வரை விழா பேருரை செஞ்சொற்கொண்டல், திருமுறைச் செம்மல் பேராசிரியர் சொ சிங்காரவேலனார் "சேக்கிழாரும் சைவசித்தாந்தச் செந்நெறியும்,, 8-30-8-40 வரை தலைவர் நிறைவுரை, 8-40-9-50 வரை நன்றியுரை சி சிவரெத்தினம் தேவாரம்

### பெரியபுராணம்

செஞ்சொற்கொண்டல் திருமுறைச்செம்மல் பேராசிரியர் சொ சிங்காரவேலனார் 31-5-79 தொடக்கம் 7-6-79 வரை மாலை 5-30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் பெரியபுராணம் பற்றிய தொடர்ச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். (கெ)

## ஐந்துபேர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விஜிசித்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம் ஜாமில் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 1975 மே 19ம் திகதி கொடிகாமத்திலும் திருநெல்வேலியிலும் ஆலோசித்து திருநெல்வேலி வங்கி முகாமையாளர் நல்லதம்பி அருணாசலம் வசமிருந்த பணத்தையும் பொருளையும் கொள்ளையடிக்க எடுத்த முயற்சிக்கு உடந்தையாக இருந்ததாகவும், வேம்பிராயைச்சேர்ந்த வேலுப்பிள்ளை விஜிசித்தம்பியின் 6 என் 6658 இலக்க காரை கொள்ளையடித்ததாகவும், அதேநேரத்தில் வேறுசிலருடன் சேர்ந்து திருநெல்வேலி வங்கிமுகாமையாளர் நல்லதம்பி அருணாசலத்திடமிருந்த பணத்தையும் பொருளையும் கொள்ளையடிக்க முயற்சித்ததாகவும் செ தனபாலசிங்கம் என்பவர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது,

எதிரிசார்பில் சட்டத்தரணி சி நாகராசா ஆஜரானார். அரசதரப்பில் சட்டதரணி ஆர் தவராசா ஆஜரானார்

வே விஜிசித்தம்பி மேலும் கூறியதாவது:

' 75 மே 19ம் திகதி கொடிகாமத்தில் வாடகைக்கு கார் வைத்திருந்தேன். கொடிகாமம் சந்தியில் இருந்தபோது ஐந்து இளைஞர்கள் வந்தனர். வானைப் புற குலையும் தேங்காய்ச் சாக்கும் கொண்டுவந்தனர். பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்குப் போகவேண்டுமென்றனர். அவர்களுடன் பேசிச் சம்மதித்தேன், 15 ரூபா தரும்படி சொன்னேன். முன்னுக்கு எனக்கு அருகில் 3 பேரும் பின்சீட்டில் 2 பேரும் இருந்தனர். கொடிகாமத்திலிருந்து வேம்பிராய் நோக்கி கார்போனது, வேம்பிராய் சுடலையடியில் காரை நிறுத்தினார்கள், பலாப்பழம் ஒன்று எடுத்துவர வேண்டும் என்றனர்.

'எல்லோரும் காரிலிருந்து இறங்கினார்கள். 5 பேரும் துப்பாக்கி வைத்திருந்தனர், எதிரியும் துப்பாக்கி வைத்திருந்தார், பின் சீட்டுக்கும், முன்சீட்டுக்குமிடையில்என்னை கிடத்தினார்கள். நான் பயத்தினால் கிடந்து விட்டேன். கார் ஒரு இடத்தில் நின்றது, என்னை அவர்கள் எழும்பவிடவில்லை. கார்போன இடங்கள் தெரியாது. எதிரி காரை ஓட்டிச் சென்றார் ஒரு இடத்தில் எதிரியைத் தவிர மற்றவர்கள் இறங்கினார்கள்; சத்தம் கேட்டது, 'ஐயோ ஐயோ' என்று ஒரு பெண் குரல் கேட்டது. ஓடிவந்து காரில் ஏறிக்கொண்டார்கள் கார் வேகமாகச் சென்றது. 3 பேர் வெவ்வேறு இடத்தில் இறங்கினார்கள். எதிரியுடன் ஒருவர் மட்டும் வந்தார். காரின் பின்னும் சயிக்கில் ஒன்றை கட்டி வந்தார்கள். நிலாவரைக்கு சமீபத்தில் காரை மறித்தார்கள். அந்த சயிக்கிளில் இருவரும் சென்று விட்டனர், நான் அங்கிருந்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு வந்து முறைப்பாடு செய்தேன்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (அ)

## கறுப்பி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லைப் பற்றி வழக்கமாக கூறும் 'கறுப்பி கறுப்பி' எனும் வார்த்தைகளை, அன்றைய தினமும் தம்பி கூறினார் என்றும் அக்கா கறுப்பாக இருப்பதனால் அடிக்கடி கறுப்பி கறுப்பி என்று தம்பி சண்டையிடுவார் என்றும் இதனைத்தொடர்ந்து மனம் நொந்த சகோதரி சாப்பிடாமல் நித்திரையானார் என்றும் நள்ளிரவு நேரத்தில் ஏதோ சத்தம் கேட்கவே "சாச்ஜ்' ல்நித்திரையாயிருந்த தந்தை விழித்துப் பார்த்தபோது, மகள் சேலையில் சுருக்கிட்டுத் தொங்கிக் கொண்டிருந்ததாகவும், உடனடியாக யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்ல முயற்சித்தபோதும் அதற்குள் மரணமானார் என்றும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

விசாரணையின் முடிவில் தற்கொலை என்று தீர்மானிக்கப்பட்டது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மே மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanadu P B No [illegible], Telegram: Eelanadu [illegible]